# நிதிச் சந்தை - I
# FINANCIAL MARKETS - I

அலகு
2

4
அத்தியாயம்

## நிதிச் சந்தை – ஓர் அறிமுகம்
## INTRODUCTION TO FINANCIAL MARKETS

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

–குறள் 512

BFX9V

**பொருள் :**

பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளைஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.

### கற்றல் நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்**

- நிதிச் சந்தையின் பொருள் மற்றும் வரைவிலக்கணத்தை புரிந்து கொள்ள முடியும்
- நிதிச் சந்தையின் வகைகளை பற்றி அறிய முடியும்
- நிதிச் சந்தையின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்ள முடியும்
- நிதிச் சந்தையின் பரப்பு அறிய இயலும்
- நிதிச் சந்தையின் முக்கியத்துவம் மற்றும் பணிகளை உணர முடியும்
- புதிய வெளியீடு சந்தை மற்றும் இரண்டாம் நிலச்சந்தை

ஆகியவற்றை புரிந்து கொள்ள இயலும்.

### அத்தியாயம் சுருக்கம்


4.01 நிதிச் சந்தையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
4.02 இந்திய நிதி சந்தையின் எல்லை
4.03 நிதிச் சந்தைகளின் வகைகள்
4.04 நிதிச் சந்தையின் பங்கு
4.05 நிதிச் சந்தையின் பணிகள்
4.06 புதிய வெளியிடுகள் சந்தை Vs இரண்டாம் நிலை சந்தை


வணிக நிறுவனங்களுக்கு தாங்கள் விரும்பிய திட்டத்தை மேற்கொள்ள பெரியளவில் நிதி தேவைப்படுகிறது. இந்த நிதிகளின் குவிப்பு ஒரு நியாயமான காலகட்டத்தில் அவற்றின் திறனை மீறி இருக்கலாம். மக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க அரசாங்கங்களுக்கு நிதி தேவை.நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கும் அரசாங்கங்களுக்கும் வெவ்வேறு கருவிகளை வழங்குவதன் மூலமும் விற்பனை செய்வதன் மூலமும் தேவையான நிதி திரட்ட உதவுகிறது. நிதிச் சந்தை முதலீட்டாளர்களுக்கு உபரி நிதிகளை முதலீடு செய்வதற்கும் வருமானத்தை ஈட்டுவதற்கும் உதவுகிறது. நிதிச் சந்தையின் உதவியுடன், அனைத்து வகையான வணிக, அரசு மற்றும் நிதி நிறுவனங்கள் குறுகிய கால நிதி மற்றும் நீண்ட கால நிதி ஆகிய இரண்டின் அடிப்படையில் நிதி உதவியைப் பெறலாம்.

இதனைப் பற்றி விரிவாக அறிந்துக் கொள்வதற்கு முன்னர் இந்திய நிதி சந்தையை பற்றிய அறிந்துக் கொள்வோம். இந்திய நிதி அமைப்பை அமைப்பு நிறுவனங்கள் மற்றும் அமைப்புச்சாரா நிறுவனங்கள் என வகைப்படுத்தலாம். அமைப்பு நிறுவனங்கள் கட்டுப்பாட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், நிதிச் சந்தைகள் மற்றும் நிதிச் சேவைகளைக் கொண்டுள்ளது. அமைப்புசாரா நிறுவனங்களில்கடன் வழங்குபவர்கள், நாட்டுப்புற வங்கியர் போன்றவர்கள் உள்ளனர். இந்திய நிதி முறை நிதி அளிப்பவர்களிடமிருந்து பயனர்களுக்கு நிதி வர உதவுகிறது. பின்வரும் வரைபடம் இந்திய நிதி முறையை விளக்குகிறது.



12th Commerce Tamil Unit 2.indd 22 19/12/2022 14:43:37